## 17.1 கைப்பம்புகள் மற்றும் விசைப்பம்புகள் ஆகியவற்றிற்கு தேவைப்படும் உதிரி பாகங்கள் வாங்குதல் மற்றும் பழுது பார்த்தல்

ஊரக வளர்ச்சி (தி3) துறை

அரசாணை (நிலை) எண். 84 நாள் : 05.05.1998

படிக்க :

1. அரசாணை (நிலை) எண்.159, ஊ.வ. நாள்–15.05.1997.
2. ஊரக வளர்ச்சி இயக்குநரின் நே.மு.க.எண்.73668/1997/கு.வ.1, நாள்–22.09.1997.

**ஆணை**

பார்வை ஒன்றில் கண்ட அரசாணையில் மாவட்ட ஆட்சித் தலைவரை கொண்ட மாவட்ட கொள்முதல் குழு ஒன்று அமைக்கப்பட்டு ஊராட்சிகளில் கைப்பம்பு / விசைப்பம்புகளுக்குத் தேவைப்படும் உதிரிபாகங்கள் வாங்குதல் மற்றும் அதனை பழுது பார்த்தல் ஆகியவை இக்குழு ஒப்புதலுடனேயே நடைபெற ஆணையிடப்பட்டது. இவ்வாறு மாவட்டக் கொள்முதல் குழு மூலம் பொருட்களை வாங்குவதிலும் மற்றும் கை/விசை பம்புகளில் ஏற்படும் பழுதுகளைச் சரி செய்வதிலும் சில நடைமுறை சிக்கல்கள் ஏற்படுவதால், காலதாமதம் ஏற்படுகிறதெனவும் இதனை நீக்குவதற்கான தனது கருத்தை ஊரக வளர்ச்சி இயக்குநர் பார்வையில் காணும் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

2.ஊரக வளர்ச்சி இயக்குநர் தெரிவித்த கருத்தினை அரசு நன்கு பரிசீலித்த பின்னர் அரசாணை நிலை எண். 159 ஊ.வ. துறை, நாள்–15.05.1997ல் திருத்தங்கள் செய்து கீழ்க்கண்டவாறு ஆணையிடுகிறது.

(1)கைப்பம்புகள்–கொள்முதல்

(I) வடிமுனைக் குழாய்கள் / ஆழமற்ற குழாய்கள் உள்ளூரிலேயே மிகக் குறைந்த விலையில் கிடைப்பதால், இவைகளை மாவட்டக் கொள்முதல் குழு மூலம் வாங்காமல் இவற்றிற்கு போட்டி விலைப்புள்ளி மற்றும் ஒப்பந்தப்புள்ளிகளை (Competitive Quotation / Tenders) வரவழைத்து உள்ளூர் சந்தையிலேயே இத்தகைய பொருட்களை ஊராட்சிகள் வாங்கிக் கொள்ள அனுமதிக்கப்படுகிறது.

(ii) இந்தியா மார்க் II / III கைப்பம்புகள் அமைப்பதற்கும் அவற்றைப் பராமரிப்பதற்கும் மாவட்ட கொள்முதல் குழு தலைவரான மாவட்ட ஆட்சித் தலைவர் இவற்றிற்கான திறந்த ஒப்பந்தப் புள்ளியை (Open Tender) வரவழைத்த பின்னர் ஒப்பந்த விலை வீதத்தை (Rate Contract) நிர்ணயிக்க வேண்டும். இவ்விலை அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட பொருள்களின் விலையை சுட்டிக்காட்ட வேண்டும். ஒப்பந்ததாரர்கள் அளிக்கும் விலைப் பட்டியலில் குறைந்தது எதுவோ அது மட்டுமே இப்பட்டியலில் இடம் பெற வேண்டும். அதன் பின் மாவட்ட ஆட்சித் தலைவர் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களுடன் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும். இந்த ஒப்பந்தத்தில், ஒரு வருட காலத்திற்கு அனைத்து மாவட்டங்களிலும் பொருட்களின் விலையை நிறுவனங்கள் மாற்றக் கூடாது எனவும், எல்லா மாவட்டத்திலும் விலை ஒரே சீராக இருக்க வேண்டும் என்ற நிபந்தனையும் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும். இதற்கு தனிப்பட்ட முறையில் டான்சி, ரிச்சர்ட்சன், குரூடாஸ் நிறுவனம் மற்றும் இந்திரா இன்ஜினியரிங் கார்ப்பரேஷன் ஆகிய நிறுவனங்களிடமிருந்து இந்தியா மார்க் II / III கைப்பம்புகளுக்கான பொருட்களை வாங்க முன்னுரிமை அளிக்காமல் அந்நிறுவனங்கள் திறந்த ஒப்பந்தப்புள்ளி மூலம் போட்டியிட செய்யலாம்.

(3)மாநில நிதிக்குழு ஊராட்சிகளுக்கு அளிக்கும் நிதியிலிருந்து ஒரு இந்தியா மார்க் II / III கைப்பம்பிற்கு தேவையான உதிரி பாகங்கள் வாங்க ஒரு கைப்பம்பிற்கு ரூ.200/– வீதம் நான்கு காலாண்டு தவணைகளில் மாவட்ட ஆட்சித் தலைவர் பெற்றுக் கொண்டு, சுழற்சி நிதியில் வரவு வைக்கலாம். இப்பொருட்களை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் பெற்றுக் கொண்டு, கூடுதல் வட்டார வளர்ச்சி அலுவலர் (பஞ்சாயத்து) பொறுப்பில் வைத்து இதனை ஊராட்சித் தலைவர்களுக்கு இலவசமாக வழங்குவார். இதில் கூடுதல் தேவை ஏற்படின் இதனால் ஏற்படும் செலவினத்தை கிராம பஞ்சாயத்து தலைவர்கள் ஏற்க வேண்டும்.

விசைப்பம்புகள் – கொள்முதல்

புதிய விசைப்பம்புகள் அமைப்பதற்கும் ஏற்கனவே இயங்கும் விசைப்பம்புகளைப் பராமரிக்கவும் (குழாய்கள், மோட்டார்கள், பி.வி.சி குழாய்கள் மற்றும் ஜி.ஐ குழாய்கள்) மாவட்டக் கொள்முதல் குழு தலைவரான மாவட்ட ஆட்சித் தலைவர் இவற்றிற்கான திறந்த ஒப்பந்தப்புள்ளியை வரவழைத்த பின்னர் ஒப்பந்த விலை வீதத்தை (Rate Contract) நிர்ணயிக்க வேண்டும். (அவ்வாறு செய்யும்போது பொருட்களின் விபரக் குறிப்பீடு), அதாவது அப்பொருள்கள் ஐ.எஸ்.ஐ

மார்க் பெற்ற பொருளாக இருக்க வேண்டும், என்று தரம் சம்பந்தமான நிபந்தனை விதிக்கலாம்) இந்த ஒப்பந்தவிலை வீதம் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட ஒவ்வொரு பொருட்களையும் அதன் விலையையும் சுட்டிக் காட்ட வேண்டும். குறைந்த விலைக்கு பொருள் வழங்க சம்மதிக்கும் தகுதியான ஒப்பந்ததாரர்கள் அனைவர் பெயரும் இந்தப் பட்டியலில் இடம் பெற வேண்டும். அதன் பின் மாவட்ட ஆட்சித் தலைவர்அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களுடன் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும். இந்த ஒப்பந்தத்தில் ஒரு வருட காலத்தற்கு அனைத்து மாவட்டங்களிலும், பொருட்களின் விலை ஒரே சீராக இருக்க வேண்டும் என்றும், நிறுவனங்கள் பொருட்களின் விலையை ஓராண்டு காலத்திற்கு மாற்றக்கூடாது என்ற நிபந்தனையும் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும்.

(II) கைப்பம்பு – பழுது பார்த்தல்

(i) கைப்பம்புகளுக்கான பழுது பார்ப்புச் செலவினை மாவட்ட கொள்முதல் குழு நிர்ணயிக்க அவசியமில்லை.

(II) கிராம பஞ்சாயத்து நிதியிலிருந்து வேலைக்கான கூலி என்ற அடிப்படையில் உள்ளூரில் பயிற்சி பெற்ற நபர்களை வைத்தோ அல்லது பொருத்துநர்களுக்கான உதவியாளர்களை வைத்தோ கிராம பஞ்சாயத்து தலைவர்கள் பழுது பார்த்துக் கொள்ளலாம். இதற்கான பொருத்துநர்களையும் அவர்கள் இலவசமாக பயன்படுத்திக் கொள்ளலாம். கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு கிராம பஞ்சாயத்துகள் பழுது பார்ப்பிற்கான விலையை நிர்ணயித்துக் கொள்ளலாம்.

(III) இந்தியா மார்க் II / III கைப்பம்புகளைப் பொறுத்தவரை ஒரு ஊராட்சிக்கு ஓர் ஆண்டுக்கு கூலிக்காக (Labour) செலவிட அனுமதிக்கப்பட்ட வரம்பு ரூ.300 ஓ ஊராட்சியில் உள்ள கைப்பம்புகளின் எண்ணிக்கை இச்செலவினை வரம்பு மீறப்படும்போது இதற்கான பட்டியலில் உதவிப் பொறியாளர் (வி.ப.பரா) அவர்கள் மேலொப்பமிட வேண்டும்.

வடிமுனைக் குழாய் பழுது பார்த்தல்

வடிமுனைக் குழாய்களைப் பொருத்தவரையில் பழுது பார்ப்பு செலவினத்திற்கான வரம்பு (வேலை + பொருட்கள்) ஒரு ஊராட்சிக்கு ஓர் ஆண்டுக்கு ரூ.200ஓ ஊராட்சியில் உள்ள வடிமுனைக் குழாய்களின் எண்ணிக்கை. இச்செலவின் வரம்பு மீறப்படும்போது உதவிப்பொறியாளர் (வி.ப.பரா) அவர்கள் இதற்கான பட்டியலில் மேலொப்பமிட வேண்டும்.

விசைப்பம்பு பழுது பார்த்தல்

1) விசைப் பம்புகளுக்கான பழுது பார்ப்பு செலவினை மாவட்ட கொள்முதல் குழு நிர்ணயிக்க வேண்டிய அவசியமில்லை.

2) ஒப்பந்தப்புள்ளி / விலைப்புள்ளி (Tender / Quotation) வரவழைத்து உள்ளூரிலேயே விசைப்பம்பு பராமரிப்பு பணியை கிராம பஞ்சாயத்து தலைவர்கள் மேற்கொள்ளலாம். இதற்காகும் செலவு பட்டியலின் அடிப்படையில் (Vouchers) கிராம பஞ்சாயத்துகளின் ஒப்புதலுடன் வழங்கப்படும். இதற்காகும் செலவு ஒரு கிராம பஞ்சாயத்துக்கு ஓர் ஆண்டுக்கு ரூ.7000 ஓ ஊராட்சியில் உள்ள விசைப்பம்புகளின் எண்ணிக்கை என்ற (கூலி + பொருட்கள்) உச்சவரம்பிற்குட்பட்டது. இதற்கு உதவி பொறியாளர் (வி.ப.பரா) மற்றும் உதவி செயற்பொறியாளர் (வி.ப.பரா) ஆகியோர் மதிப்பீடு செய்யவோ மேல் மதிப்பீடு செய்யவோ வேண்டியதில்லை. இச்செலவின வரம்பு மீறப்படும்போது உதவிப் பொறியாளர் (வி.ப.பரா) அவர்களால் மேலொப்பமிட வேண்டும்.

III. பொருத்துநர்களுக்கு உதவியாளர் மற்றும் உதவி செய்யும் பணியில் ஈடுபடுத்தப்பட்டவர்களுக்கு பழுது பார்த்தலுக்கு கூலி அளித்தல்

வட்டார பொருத்துநர்கள் (Block Fitters) பணியை கிராம பஞ்சாயத்துகள், குடிநீர் பராமரிப்புப் பணிக்கு பயன்படுத்திக் கொண்டாலும் அவர்களுக்கான ஊதியத்தை அவர்கள் ஊராட்சி ஒன்றிய பொது நிதியிலிருந்து பெற்றுவருகிறார்கள். எனவே பொருத்துநர்கள் தொடர்ந்து தங்களுடைய ஊதியத்தை சிறிது காலத்திற்கு பஞ்சாயத்து யூனியனிலிருந்து பெற அனுமதிக்கலாம். மாநில நிதிக்குழுவின் சமன்பாட்டு நிதியிலிருந்து இவ்வாறு வழங்கப்படும் ஊதியத் தொகை ஊராட்சி ஒன்றியங்களுக்கு திருப்பி வழங்கப்படும். எதிர்காலத்தில் வட்டார பொருத்துநர் பணிக்கு ஏற்படும் காலியிடங்கள் நிரப்பப்படமாட்டாது என தெரிவிக்கலாம். பொருத்துநர்களுக்கு உதவியாளர்கள் மற்றும் உதவி செய்யும் பணியில் கிராம பஞ்சாயத்து தலைவர்கள் (Piece rate basis) ஈடுபடுத்தப்பட்டவர்கள் இனிமேல் கிராம பஞ்சாயத்துகளில் வேலைக்கான கூலி அடிப்படையில் கூலியைப் பெற்றுக் கொள்வர். ஊராட்சி ஒன்றிய பொது நிதியிலிருந்து அவர்களுக்கு ஊதியம் வழங்கப்படமாட்டாது. அரசாணை நிலை எண். 31 2ந.நி (ம) கு.வ. துறை ,நாள்– 14.05.1985 ஐ உடனடியாக இரத்து செய்யப்படுகிறது.

IV. உதவிப் பொறியாளர் (வி.ப.பரா) மற்றும் உதவி செயற்பொறியாளர் (வி.ப.பரா) ஆகிய பதவிகளை பெயர் மாற்றம் செய்தல்

மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் ஊராட்சி தலைவர்களுக்கும் தற்போதுள்ள கைப்பம்பு / விசைப்பம்புகளை பராமரிக்கும் முறையில் தொழில் நுட்ப ரீதியான அறிவுரை வழங்குவதோடு புதிய கைப்பம்பு / விசைப்பம்புகள் அமைக்கும் பணி போன்ற புதிய பொறுப்புகள் வழங்கப்பட்டுள்ளதால் உதவி பொறியாளர் (வி.ப.பரா) மற்றும் உதவி செயற்பொறியாளர் (வி.ப.பரா) ஆகிய பதவிகளை முறையே உதவிப் பொறியாளர் (கு.வ) மற்றும் உதவி செயற்பொறியாளர் (கு.வ) என பெயர் மாற்றம் செய்யப்படுகிறது.

5.இந்தியா மார்க் II / III கைப்பம்புகள் / வடிமுனைக் குழாய்கள் / ஆழமற்ற குழாய்கள் போன்ற பம்புகள் பழுது பார்ப்பு செலவினம் மற்றும் விசைப்பம்புகள் பழுது பார்ப்பு செலவினம் ஆகியவை கிராம ஊராட்சிகளின் சமுதாயத் தணிக்கைக்கு (Social Audit) உட்பட்டதாகும். அதாவது கிராம ஊராட்சிகளை மேற்கண்ட செலவினத்திற்கான பட்டியை (BILL) கிராம ஊராட்சி உறுப்பினர்களுக்குச் சமர்ப்பிக்க வேண்டும்.

இவ்வரசாணை நிதித் துறை அ.சா.எண். 168/எஸ்.எஸ்/98, நாள்–30.03.1998 இசைவு மூலம் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**இரமேஷ் சந்திர பண்டா**
அரசு செயலாளர்